

# 6

# தொழுகையின் வகைகள்

தொழுகை இஸ்லாத்தில் மிக உயரிய வணக்கமாகும். இது அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துகின்றது. தொழுகையின்போது ஒரு முஸ்லிம் தனது இரட்சகனான அல்லாஹ்வுடன் உரையாடுகின்றான். மனிதனைப் பாவங்களிலிருந்து பரிசுத்தப்படுத்தும் இம்மகத்தான கடமையில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளோம். இத்தொழுகை இஸ்லாத்தில் பல்வேறு அடிப்படைகளில், பல வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. தொழுகையை நிறைவேற்றுவதில் உள்ள கடமைப்பாடு, நிறைவேற்றப்படும் முறை என்பவற்றின் அடிப்படைகளில் இதனை வேறுபடுத்தி நோக்கலாம்.

## 1. பர்ளு

### 1) பர்ளு ஐன்

ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய தொழுகையை இது குறிக்கும். இதனை நிறைவேற்றாத போது அவர் பாவியாகக் கருதப்படுவார். பின்வருவன பர்ளு ஐனைச் சார்ந்தவை ஆகும்.

- ஐவேளைத் தொழுகைகள் : ஸுபஹ் (பஜ்ர்), ளுஹர், அஸர், மஃரிப், இஷா
- ஜும்ஆ தொழுகை
- நேர்ச்சைத் தொழுகை

### 2) பர்ளு கிபாயா

சமூகத்தில் இதனைப் போதிய அளவினர் நிறைவேற்றுவது கடமையாகும். இல்லாதபோது அனைவரும் பாவிகளாகக் கருதப்படுவர். உதாரணமாக

- ஜனாஸா தொழுகை (மரணித்தவருக்காக தொழும் தொழுகை)

# 2. ஸுன்னத்

அனைத்து ஸுன்னத்துத் தொழுகைகளையும் அவற்றின் தன்மைகள், அவற்றை நிறைவேற்றும் முறைகள், அவை நிறைவேற்றப்பட வேண்டிய கால நேரங்கள் போன்றவற்றின் அடிப்படையில் மூன்று தொகுதிகளில் உள்ளடக்கி நோக்குவர்.

அ. ஸுன்னா முஅக்கதா - ஸுன்னா கைரு முஅக்கதா

ஆ. ராதிபத்து - கைரு ராத்திபத்து

இ. ஜமாஅத்தாகத் தொழக் கூடியவை - தனித்துத் தொழக் கூடியவை

## அ. ஸுன்னா முஅக்கதா - ஸுன்னா கைரு முஅக்கதா

### 1) ஸுன்னா முஅக்கதா

இவை வலியுறுத்தப்பட்ட ஸுன்னத்தான தொழுகைகளாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவற்றைத் தவறாது பேணி வந்துள்ளார்கள்.

ஸுபஹ் - முன் 02, ளுஹர் முன் 02 - பின் 02, மஃரிப் - பின் 02, இஷா - பின் 02, வித்ர், பெருநாள் தொகை, கிரகணத் தொழுகை போன்றன இவற்றுக்கான சில உதாரணங்களாகும்.

### 2) ஸுன்னா கைரு முஅக்கதா

வலியுறுத்தப்படாத ஸுன்னத்தான தொழுகைகளாகும். இவை அதிக நன்மைகளைப் பெற்றுத்தரக் கூடியனவாகும்.

பர்ளான ஐவேளைத் தொழுகைக்கு முன், பின் நிறைவேற்றப்படும் ஏனைய ஸுன்னத்தான 12 ரக்ஆத்கள், தஹிய்யத்துல் மஸ்ஜித், வுழூ செய்ததும் தொழும் ஸுன்னத் தொழுகை இவற்றுக்கான சில உதாரணங்களாகும்.

## ஆ. ராதிபத்து - கைரு ராத்திபத்து

### 1) ராதிபான ஸுன்னத்கள்

இவை நாளாந்தம் நிறைவேற்றக் கூடிய ஸுன்னத்தானதொழுகைகளாகும்.

உதாரணம்

- தஹஜ்ஜுத் தொழுகை
- வித்ர் தொழுகை
- ழுஹா தொழுகை

### 2) கைரு ராதிபான ஸுன்னத்கள்

இவை நாளாந்தம் நிறைவேற்றப்படாத ஸுன்னத்தான தொழுகைகளாகும்.

உதாரணம்

- ஸலாதுல் ஈதைன் - பெருநாள் தொழுகைகள்
- ஸலாதுல் குஸூபைன் - கிரகணத் தொழுகை (சூரிய, சந்திர)
- ஸலாதுல் இஸ்திஸ்கா - மழை வேண்டித் தொழும் தொழுகை

## இ. ஜமாஅத்தாகத் தொழக் கூடியவை - தனித்துத் தொழக் கூடியவை

பொதுவாகத் தொழுகையானது ஜமாஅத்தாகத் தொழக்கூடியவை, தனித்துத் தொழக்கூடியவை என இரண்டு வகையாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

| ஜமாஅத்தாகத் தொழக் கூடியவை | தனித்துத் தொழக் கூடியவை |
|---|---|
| ★ ஐவேளை பர்ளான தொழுகை | ★ ராதிபான ஸுன்னத்துக்கள் |
| ★ ஜுமுஆத் தொழுகை | ★ வித்ர் |
| ★ பெருநாள் தொழுகை | ★ தஹஜ்ஜுத் தொழுகை |
| ★ கிரகணத் தொழுகை | ★ தஹிய்யத்துல் மஸ்ஜித் |
| ★ தராவீஹ் தொழுகை | ★ ளுஹா |
| ★ ஜனாஸாத் தொழுகை | ★ ஸலாத்துல் இஸ்திஹாரா |
| ★ ரமழான் மாத வித்ர் தொழுகை | ★ ஸலாத்துல் ஹாஜா |
| ★ மழை வேண்டி தொழும் தொழுகை | ★ வுழூவின் பின் தொழும் ஸுன்னத் தொழுகை |

மேலுள்ளவற்றுள் ஜுமுஆத் தொழுகையானது கட்டாயமாக ஜமாஅத்துடன் நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகையாகும்.

பொதுவாக அனைத்து தொழுகைகளும் எமக்கு அளவற்ற நன்மைகளைப் பெற்றுத் தருவனவாக உள்ளன. மேலும் அவை எமது பாவங்கள் நீங்கவும் காரணமாகின்றன. அத்துடன் அவை எம்மை சுவனத்துக்கு அழைத்துச் செல்லவும் துணை செய்கின்றன.

எனவே **நாம் பர்ளான தொழுகைகளை கண்டிப்பாக உரிய நேரத்துக்கு நிறைவேற்றுவதுடன் ஸுன்னத்தான தொழுகைகளையும் அலட்சியப்படுத்தாமல் எம்மால் முடிந்தளவு நிறைவேற்றி அல்லாஹ்வின் நெருக்கத்தையும் அன்பையும் பெறுவதற்கு முயற்சிப்போம்.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

فَرْضُ عَيْنٍ    فَرْضُ كِفَايَةٍ    رَاتِبٌ    نَفْلٌ    أَبْعَاضُ    ضُحَى    مُؤَكَّدَةٌ

صَلاةُ الحَاجَةِ    صَلاةُ الْكُسُوفَيْنِ    صَلَاةُ الْإِسْتِسْقَاءُ    وِتْرٌ    صَلَاةُ الْعِيْدَيْنِ    تَحَجُّدٌ

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. பின்வரும் தொழுகைகளை பர்ளு, ஸுன்னா என வகைப்படுத்துக.
   1) ஜும்ஆத் தொழுகை
   2) நேர்ச்சைத் தொழுகை
   3) பெருநாள் தொழுகை
   4) பஜ்ர் தொழுகை
   5) கிரகணத் தொழுகை
   6) ழுஹாத் தொழுகை
2. கண்டிப்பாக ஜமாஅத்தாக நிறைவேற்ற வேண்டிய தொழுகை ஒன்றைக் குறிப்பிடுக.
3. ஜமாஅத்தாகவும் தனித்தும் தொழக் கூடிய இரு தொழுகைகளைக் குறிப்பிடுக.
4. நாளாந்தம் நிறைவேற்றக் கூடிய ஸுன்னத்தான தொழுகைகள் ஐந்தை எழுதுக.
5. ஐங்காலத் தொழுகையின் முன், பின் நிறைவேற்றப்படும் ஸுன்னத்தான தொழுகைகளை அட்டவணைப்படுத்துக.